மேட்டூரில் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்

* 117 வினு :—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்கான டிரான்ஸ்பார்மர் (Tranformer) ராமமூர்த்தி நகரம் அரிஜன குடியிருப்பிற்கு அருகாமையில் அமைக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது அங்குள்ள அரிஜன மக்களுக்கு இடைஞ்சலாக இருக்குமென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அங்கு வசிக்கும் அரிஜன மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணம் டிரான்ஸ்பார்மர் அமைத்துக் கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

Taxis in Madras City

* 118 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(*a*) whether the Commissioner of Police, Madras called for a conference of taximen and the public about May, 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 8—5—1972 அன்று நடந்த டாக்ஸி ஓட்டுநர், பொதுமக்கள் இவர்கள் பிரதிநிதிகளின் கூட்டமொன்றில் சவாரிக்கு வர மறுக்கும் ஓட்டுநர்கள் மீதும், அதிகப்படியான கட்டணத்தை கோருபவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஏகமனதான உடன்பாடு ஏற்பட்டது.

திரு எம். செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இரவு நேரங்களில் டாக்ஸிகாரர்கள் அதிகப்படியான வாடகை கேட்கிறுர்கள். கொடுக்கவில்லையென்றுல் வர மறுக்கிறுர்கள். அமைச்சர் அவர்கள் தற்போது ஒப்புந்தம் ஏற்பட்டு இருப்பதாகக் கூறிஞர்கள். அதை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

* மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வர மறுக்கின்ற ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தான் ஏகமனதாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் வர .மறுக்கின்றவர்கள்